DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM

Present : Thiru. A. Saravana Senthil Kumar, B.Com., B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 60/2020**

**(CNR.No: TNTH06-000145 -2019 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : சங்கிலிசெட்டியார் | Religion | : |
| Father's Name | : | Occupation | : |
| Caste | : | Place | : |
| Age | : | **PW1** | |

---

நாள் :30.01.2024

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1)** எனது வீட்டின் டி.எஸ் நம்பர் 97 என்றால் சரிதான். வாசாஆ 3 ஆவணமான கட்டிட வரைபட அனுமதி எதன் அடிப்படையில் கொடுத்தார்கள் என்றால் எனது பத்திரத்தின் அடிப்படையில் நேரில் பார்த்து அளவீடு செய்து பின்னர் ஒப்புதல் கொடுத்தார்கள். எனது பத்திரமான வாசாஆ 2 ன் படி எனது சொத்தின் கிழமேல் அளவு என்ன என்றால் 10.3/4 அடி ஆகும். வாசாஆ 2 ன் அடிப்படையில் கிழமேல் அளவு 10.3/4 அடி மட்டுமே உள்ள நிலையில் வாசாஆ 3 கட்டிட வரைபட அனுமதியின்படி கிழமேல் அளவு கூடுதலாக 3.51 மீட்டர் என்று எவ்வாறு கொடுக்கப்பட்டது என்றால் அளவீடு செய்து பார்த்து கொடுத்தார்கள்.

2) நான் கூறுவது போல் எனது இடத்தை அளவீடு செய்து பார்க்கவில்லை என்றும், எனது செல்வாக்கை பயன்படுத்தி பத்திர அளவைவிட கூடுதலாக காட்டி கட்டிட வரைபட அனுமதி பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வாசாஆ 3 கட்டிட வரைபட அனுமதியின் அடிப்படையில் உரிமைக்கோர எனக்கு சட்டப்படி எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியுடன் தாவா சொத்தை பார்வையிட்டு அளவீடு செய்தபோது எனது பத்திரப்படி அளந்தாரா

அல்லது டி.எஸ்.நம்பர் பதிவின்படி அளந்தாரா என்றால் டவுன்சர்வே அளவின் படிதான் அளந்து ஆணையருக்கு அளவீடு காட்டினார். சர்வேயர் அளவீடு செய்து காட்டிய குறிப்புகள் எதுவும் ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

3) டி.எஸ்.நம்பர் 97 க்கு ஆணையர் அறிக்கையுடன் சர்வேயர் கொடுத்துள்ள புல வரைபடத்தின்படி தென்பக்கம் கிழமேல் 3.3 மீட்டர் என்றும், வடக்குபக்கம் கிழமேல் 3.1 மீட்டர் என்றும், தென்வடல் கிழக்குப்பக்கம் 6.5 மீட்டர் என்றும் , தென்வடல் மேற்குப்பக்கம் 6.7 மீட்டர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் வகையறாவின் சொத்திற்கான டி.எஸ்.நம்பர் 99 என்றால் சரிதான். மேற்படி டி.எஸ்.நம்பர்.99-க்கான கிழமேல் தென்பக்கம் 6.5 மீட்டர் என்றும், கிழமேல் வடக்குபக்கம் 6.2 மீட்டர் என்றும், தென்வடல் கிழக்குப்பக்கம் 21.8 மீட்டர் என்றும், மேற்குபக்கம் தென்வடல் 19.7 மீட்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தனது வரைபட அறிக்கையில் மேற்கண்ட அளவுப்படி அளவீடு கொடுக்காமல் தனது விருப்பப்படியான அளவுகளை குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கை தெளிவில்லாமலும், முன்னுக்குபின் முரணாகவும் உள்ளது என்றால் சரியல்ல.

4) எனவே, நீதிமன்ற ஆணையர் அறிக்கை ஏற்றுக்கொள்ளத்தக்கதில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தனது கட்டிடம் கட்ட வானம் தோண்டியது முதல் கட்டிடப்பகுதி முழுவதுமாக கட்டி முடிக்க 1.1/2 ஆண்டுகள் ஆனது என்றால் சரியல்ல, ஒரு வருடத்தில் முடித்துவிட்டார். பிரதிவாதி தனது கட்டிடத்திற்கு மேற்கே இடம் விட்டு கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு விட்டுவைத்துள்ள இடத்தில் தான் பிரதிவாதி ஜன்னல் மற்றும் சிலாப்புகள் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்த காலத்தில் தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமை மூலமும் இல்லை என்றும், எனவே, நான் இவ்வழக்கை மேல்நடத்தி வருவது சட்டப்படி நிலைக்கத்தக்கதில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

இவ்வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் அனைத்தும், காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் காரணமாகவும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

5) பிரதிவாதி கட்டிடம் கட்டி முடிக்க 1.1/2 ஆண்டு காலம் எடுத்துக்கொண்ட நிலையில் மேற்படி காலம் முழுவதும் பிரதிவாதி கட்டிட பணியை தடுத்து நிறுத்த நீதிமன்றம் மூலம் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அமைதியாக இருந்துவிட்டு, பிரதிவாதி முழுமையாக கட்டிடம் கட்டி முடித்தபின்னர் பிரதிவாதியிடம் மிரட்டி பணம் பறிக்கும் நோக்கத்தில் தவறான விபரங்களுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே, நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதாக இல்லை என்று சொன்னால் சரியல்ல.

(ஒ.ம்) A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.